**JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU**

**CC No.472/2010**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW- 13 |
| Name | : Jagadesan |
| Father's Name | : Narayanasamy |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.09.2019.

**முதல் விசாரணை.**

நான் தற்போது விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 2001யிலிருந்து 2005 வரை நான் ஊராட்சி மன்ற துணை தலைவராக இருந்தேன். கடந்த 2006யிலிருந்து 2011 வரை என்னுடைய மனைவி ஜான்சி ராணி என்பவர் ஊராட்சி மன்ற தலைவராக இருந்து வந்தார். 2009யில் சிபிசிஐடி போலிஸ்சார் எங்கள் ஊரை சேர்ந்த சிவலிங்க செட்டியாரை போலீஸ்சார் விசாரித்தார்கள். அப்போது அவர் பயந்து விசாரணைக்கு செல்லவில்லை. அவருடைய மகன் வேல்மணியாகும். அப்போது சிவலிங்க செட்டியார் என்னையும் விசாரணைக்கு கூட அழைத்து சென்றார். வரஞ்சரம் காவல் நிலையத்திற்கு நானும் சிவலிங்க செட்டியாரும் சென்றோம். போலீஸ்சார் சிவலிங்க செட்டியாரிடம் அவருடைய மகனான வேல்மணி என்பவர் வெளிநாடு செல்வதற்காக அதிக பேரிடம் வாங்கி விட்டு அனுப்பாமல் போர் ஜெரி செய்தது குறித்து என்ன சொல்கிறீர்கள் என்று போலீஸ்சார் சிவலிங்க செட்டியாரிடம் கேட்டார்கள். அப்போது அவர் தன்னுடைய பேச்சை தன் மகனான வேல்மணி கேட்பதில்லை என்றும், அவர் மீது எந்த நடவடிக்கை வேண்டுமானாலும் எடுத்து கொள்ளுங்கள் என்று போலீஸ்சாரிடம் சிவலிங்க செட்டியார் சொன்னார். சிவலிங்க செட்டியாரின் மகன் இந்நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ள எதிரியாகும். போலீஸ்சார் என்னை தனியாக விசாரிக்கவில்லை.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

நான் ஊர் தலைவர் என்ற முறையில் விசாரணைக்கு உடன் சென்றேன். எனக்கு வேல்மணி செய்யும் வேலை குறித்த விவரம் தெரியாது. காவல் நிலையத்தில் வேல்மணியின் தகப்பனாரை மட்டும் விசாரித்தார்கள். என்னை விசாரிக்கவில்லை. போலீஸ்சார் கேட்டுக்கொண்டதின் பேரில் நீதிமன்றத்திற்கு சாட்சி அளிக்க வந்தேன்.

**மறு விசாரணை.** இல்லை.